KEMENTERIAN SUMBER MANUSIA

PERKESO

# அந்நியத் தொழிலாளர்களுக்கானசமூகப் பாதுகாப்புத் திட்டம்





## அந்நியத் தொழிலாளர்களுக்குப் பணியிட விபத்து பாதுகாப்புத் திட்டம்

பணிக் காலத்தில் பணியிடத்திலும் வெளி இடங்களிலும் ஏற்படக்கூடிய பணியிட நோய்கள் அல்லது விபத்துகளுக்கு எதிராக தொழிலாளர்களுக்கு இத்திட்டம் பாதுகாப்பு அளிக்கிறது.

1969ஆம் ஆண்டு தொழிலாளர் சமூகப் பாதுகாப்புச் சட்டம் (சட்டம் 4) கீழ் பணியிட விபத்து திட்டத்தின் வழி பாதுகாப்பு பெறுவதற்கு 1 ஜனவரி 2019 முதல் முதலாளிகள் தங்களின் அந்நியத் தொழிலாளர்களைச் சமூகப் பாதுகாப்பு நிறுவனத்தில (சொக்சோ) பதிவுசெய்ய வேண்டும்.

### பங்களிப்பு

சம்பளத்தில் 1.25 விழுக்காட்டு சந்தாவை முதலாளி மட்டும் மாதந்தோறும் செலுத்த வேண்டும்.

### தகுதி

- கண்டிப்பாகச் செல்லத்தக்க பாஸ்போர்ட் வைத்திருக்க வேண்டும்.
- கண்டிப்பாகச் செல்லத்தக்க வேலை பெர்மிட் வைத்திருக்க வேண்டும் (தற்காலிக வேலை விசிட் பாஸ் (PLKS), தொழில் பாஸ், சிறப்பு பாஸ் அல்லது ஏற்புடைய இதர பாஸ்)

### பதிவு

- PERKESO ASSIST PORTAL வழி ஆன்லைன் வழி பதிவுசெய்ய வேண்டும்.
- சொக்சோ முகப்பிடங்கள் (வெளிநாட்டுத் தொழிலாளர் பதிவு பாரம்/ உள்நாட்டுத் தொழிலாளர் பதிவு பாரம் வழியும் பதிவுசெய்யலாம்.)

## இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பலன்கள்



மருத்துவப் பலன்கள்



நிலையான பராமரிப்பு அலாவன்ஸ்.



தற்காலிக செயலிழப்பு பலன்கள்



சார்ந்திருப்போருக்கான பலன்கள்



புனர்வாழ்வு வசதிகள்



நிரந்தர செயலிழப்பு பலன்கள்



இறுதிச்சடங்கு பலன்கள்

* பணியிடக் காயங்கள், சம்பந்தமில்லாத மரணம் நேர்ந்தால் தாய்நாட்டிற்கு உடலை அனுப்பிவைப்பதற்கு ஏற்படும் செலவில் அதிகப்பட்ச 4,500 ரிங்கிட் திருப்பித் தரப்படும். இதற்கு அதிகாரப்பூர்வ ரசீது தேவை. (நடப்புச் சூழ்நிலைக்கு உட்பட்டது)

**மேலதிகத் தகவல்களுக்கு சொக்சோ வாடிக்கையாளர் சேவை மையத்தைத் தொடர்புகொள்ளலாம்.**

Telephone: 1-300-22-8000

Email: perkeso@perkeso.gov.my